**ம.சா.1.ராஜசேகரன் த/பெ.தாணு**

**எதிரி ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுசபடி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

**1)** இந்த வழக்கின் புகார்தாரர் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற நபர் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். **மேற்படி நிறுவனத்தால் கடந்த 27.07.2017ம் தேதியன்று வழங்கப்பட்ட பொது அதிகார ஆவணம் ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.** என்னால் தாக்கல் செய்யப்பட்ட புகார் மனுவில் கண்ட ஆவணப்பட்டியலில் முதலாவது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ளதில் மேற்படி பொது அதிகார ஆவணம் A.மணிகண்டன் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அவ்வாறு மணிகண்டன் என்பவருக்குதான் பொது அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளதிலிருந்து எனக்கு இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்க எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட A.மணிகண்டன் என்பவர் எங்கள் நிறுவனத்தில் எனக்கு முனபாக பணியாற்றியவர். அதனால் அவர் பெயரில் சில வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

2) அதன் பின் நான் பொறுப்பிற்கு வந்த பின்பு இந்த வழக்கை தாக்கல் செய்தபோது, தவறுதலாக ஆவணப்பட்டியலில் அவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை தற்போது நான் தெரிந்துகொண்டேன். இந்த வழ்க்கிற்கான விபரங்களை வழக்கறிஞரிடம் நான் தான் தெரிவித்தேன். நான் தெரிவித்த விபரங்களின் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். கரூர் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் தான் எங்களுடைய நிறுவனம் இயங்கி வருவதால் கரூர் நீதிமன்றத்தில் இதுபோன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்படுகிறது. இதுபோன்ற கரூர் நீதிமன்றங்களில் எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தற்போது சுமார் 10 அல்லது 12 வழக்குகள் நிலுவையில் இருக்கும்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

இவ்வழக்கின் புகார்மனுவை நான் படித்துபார்த்துதான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விபரம் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும் எங்களது வழக்கறிஞரிடம் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த தகவலும் தெரிவிக்கவில்லை என்றாலும் சாட்சியம் அளிப்பதற்கு மட்டும்தான் இந்த வழக்கில் ஆஜர் ஆகியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

3) இவ்வழக்கு காசோலை ம.சா.ஆ 3 எதிரியால் எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என புகாரில் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்களது விற்பனை பிரதிநிதியிடம் கொடுக்கப்பட்டது. காசோலையில் கையொப்பம் செய்துள்ள மையிக்கும் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களுக்கான மையிக்கும் வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். இந்த காசோலை யார் எழுதினது, எப்படி எழுதினது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்களது வழக்கறிஞரிடம் எதிரிக்கு அனுப்பட்ட இவ்வழக்குக்கான சட்ட அறிவிப்பு சார்வு செய்யப்படவில்லை என்றால் சரிதான். எதனால் சார்வு செய்யப்படவில்லை என்றால் அந்த நபர் அந்த விலாசத்தில் இல்லை என்பதால் திருப்பப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரியின் முகவரியாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ அந்த முகவரியை குறிப்பிட்டு தான் இவ்வழக்கு அழைப்பாணையை சார்பு செய்ய எங்களால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எங்களது நிறுவன டீலர்களிடம் நாங்கள் காசோலைகளை பொறுப்புக்காக பெற்றுக் கொள்வது வழக்கம் என்றால் இல்லை.

4) நான் பணிபுரியும் நிறுவனம் அரசு நிறுவனம் என்பதால் தனி நபர்களுக்கு கடன் வழங்க அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எந்த நபர்கள் கேட்டாலும் சிமெண்ட் விற்பனை செய்வோமா என்றால் இல்லை. அதற்காக எந்தவிதமான உத்தரவாத ஆவணமும் பெற்றுக் கொள்வதில்லை. நான் பணிபுரியும் இடம் சென்னையில் உள்ள அலுவலகம் என்றால் தற்போது சென்னையில் பணியாற்றி வருகிறேன், இவ்வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் நான் கரூரில் பணியாற்றி வந்தேன். எதிரி எங்கள் நிறுவனத்தின் டீலராக

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

இருப்பதாலும், அப்போது எங்கள் நிறுவனம் வசம் கொடுக்கப்பட்ட காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் மற்றும் இதர எழுத்துக்களுக்கும் உள்ள மை வித்தியாசம் உள்ளது என்றாலும், எங்கள் நிறுவனத்திற்கும், எதிரிக்கும் இடையே உள்ள வரவு செலவு குறைபாட்டின் காரணமாக இந்த பொய்யான புகாரினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

5) ம.சா.ஆ.2 கணக்கு அறிக்கையை நான் நேரடியாக பராமரிப்பது இல்லை என்றால் சரிதான். Accounts Department–ல் தான் பராமரிப்பார்கள். நான் ம.சா.ஆ.2 அறிக்கையை நேரடியாக பராமரிக்கவில்லை என்பதால் ம.சா.ஆ.2 அறிக்கையில் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. Account Departments கணக்கு விபரம் பற்றி மட்டும் தான் பராமரிப்பார்கள். ஆனால் டீலர்களுக்கு எவ்வளவு சிமெண்ட் கொடுக்க வேண்டும், அதற்கு எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியும். வரவு செலவு சம்மந்தமான எந்த அறிக்கையும் நான் கையில் எழுதி தயார் செய்வதில்லை என்றால் சரிதான். எதிரிக்கு எங்களது நிறுவனம் சார்பாக கொடுக்கப்பட்ட Invoice களில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் மின்னணு கையொப்பம் தான் செய்துள்ளேன். அதனை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மேற்படி மின்னணு கையொப்பம் எதற்காக இடப்படுகிறது என்றால் 24 மணி நேரமும் விற்பனை நடைபெறுவதால் அவற்றில் என்னால் நேரடியாக கையொப்பம் இட முடியாது என்பதால் மின்னணு கையொப்பம் நடைமுறையில் இருந்து வருகின்றது.

6) மேற்படி Invoice களை நான் தான் நேரடியாக கொடுப்பேனா என்றால் இல்லை. எங்களது நிறுவனத்தில் எனது பணி Marketing Manager பணி தான் தவிர Invoice வழங்குவது டிஜிட்டல் கையொப்பம் செய்வது என்னுடைய பணி இல்லை என்றால் சரியல்ல. எங்களது நிறுவனத்தில் மேற்படி பணிகளை

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

செய்வதற்கு தனியாக வேலை நபர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். ஆனால் அவர்கள் எனது நேரடி மேற்பார்வையில் பணியாற்றுவார்கள். ம.சா.ஆ.2 கணக்கு அறிக்கையில் எனது கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது. சான்றிட்டு கையொப்பம் செய்துள்ளேன்.

7) ம.சா.ஆ.2–ல் தமிழ் செல்வன் என்பவ்ர Manager Accounts என சீல் செய்து கையொப்பம் செய்துள்ளாரா என்றால் சரிதான். ம.சா.ஆ.3 காசோலையை எந்த தேதியன்று எதிரி எங்கள் நிறுவனத்திற்கு வழங்கினார் என குறிப்பிட்டு புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ–3 காசோலை வழங்கப்பட்ட தேதி, இடம் எதுவும் குறிப்பாக சொல்லப்படாமல் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் இடையே உள்ள வரவு செலவு பிரச்சனைகளை பயன்படுத்தி எதிரியால் பொறுப்புக்காக கொடுக்கப்பட்ட காசோலையை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியால், எங்கள் நிறுவனத்திற்கு சட்டப்படியாக கொடுக்க வேண்டிய தொகை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 கணக்கு அறிக்கை எங்கள் நிறுவனத்தால் இவ்வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும், ம.சா.ஆ.3 காசோலையின் பேரில் எந்த விதமான பிரதிபிரயோஜனமும் இல்லை என்றாலும், எதிரி இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.